# 2018

# செயலாற்றுகை அறிக்கை

தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம

# உள்ளடக்கம்


| அத்தியாய இல. | | விடயம் | பக்கம் |
|---|---|---|---|
| **01.** | | **மேன் நோக்கு** | 01 |
| | 1.1 | தூர நோக்கு | 01 |
| | 1.2 | பணிக்கூற்று | 01 |
| | 1.3 | இலக்கு | 01 |
| | 1.4 | பணிகளும் பொறுப்புக்களும் | 02 |
| | 1.4.1 | தேசிய வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரித்தல் | 02 |
| | 1.4.2 | தேசிய வரவு செலவுத்திட்டத்தினைச் செயற்படுத்தல் 2018 | 03 |
| | 1.4.3 | முற்பணக் கணக்கு செயற்பாடுகள் | 03 |
| | 1.4.4 | வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டு செயற்பாட்டைக் கண்காணித்தல் | 03 |
| | 1.4.5 | வெளிநாட்டு அபிவிருத்திப் பங்காளர்களுக்கான வசதியேற்பாடு | 04 |
| | 1.4.6 | செயலாற்றுகைப் பொறுப்பு | 04 |
| | | | |
| **02.** | | **வரவு செலவுத்திட்ட மீளாய்வு மற்றும் செயற்படுத்தல் - 2018** | 08 |
| | 2.1 | ஒதுக்கீட்டுச் சட்டம் 2018 | 08 |
| | 2.2 | குறைநிரப்பு மதிப்பீடுகள் | 09 |
| | 2.3 | குறைநிரப்பு ஒதுக்கீடாக விசேட சட்ட ஆணைப்பத்திரம் | 09 |
| | 2.4 | வரவு செலவுத்திட்ட செயலாற்றுகை - 2018 | 10 |
| | 2.5 | முற்பணக்கணக்கு நடவடிக்கைகள் | 15 |
| | 2.6 | வரவு செலவுத்திட்ட முகாமை 2018 | 15 |
| | 2.6.1 | நிதி மாற்றல்கள் | 15 |
| | 2.6.2 | குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள் | 16 |
| | 2.6.3 | வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தை வெளியிடுதல் | 17 |
| | | | |
| **03.** | | **வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல் 2018** | 17 |
| | 3.1 | வரவு செலவுத்திட்ட தயாரிப்புக்கான வழிகாட்டல்கள் | 17 |

| | | | |
|---|---|---|---|
| **04.** | | **விசேட செயற்பாடுகள்** | 17 |
| | 4.1 | அரசாங்க தொழில் முயற்சிகளின் வரவு செலவுத்திட்ட முகாமை | 17 |
| | 4.2 | அமைச்சரவை விஞ்ஞாபனம் | 18 |
| | 4.3 | சபைகளிலும் குழுக்களிலும் பதவியினரின் பங்குபற்றுதல் | 20 |
| | | | |
| **05.** | | **தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்கள நிறுவனக் கட்டமைப்பு மற்றும் பங்களிப்பு** | 20 |
| | 5.1 | பதவியணி | 20 |
| | 5.2 | மனிதவள அபிவிருத்தி | 22 |
| | 5.2.1 | வெளிநாட்டு பயற்சி/கருத்தரங்குகள்/கூட்டங்கள் | 22 |
| | 5.2.2 | உள்நாட்டு பயிற்சிகள் | 24 |
| | 5.3 | தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் நிதி நிர்வாகம் | 26 |
| | 5.3.1 | பொது அலுவலர் முற்பணக் கணக்கு செயற்பாடுகள் 2018 | 27 |
| | 5.3.2 | கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு வினாக்கள் 2018 | 28 |
| | 5.4 | நிறுவனக் கட்டமைப்பு | 29 |
| | | | |

# 1. மேன் நோக்கு

தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களமானது பாராளுமன்ற சட்டங்களின் ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட சட்ட வேலைச் சட்டகத்திற்குள் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தொழிற்படுகின்றது. நடுத்தரகால பேரண்டப் பொருளாதார வேலைச் சட்டகத்திற்குள் இணங்கும் வகையில் நடுத்தரகால செலவினத்தினை துறை ரீதியான அடிப்படையில் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதை திணைக்களத்தின் தொழிற்பாடுகள் முக்கியமாகக் கொண்டுள்ளது. நடுத்தரகால வேலைச்சட்டகமானது துறை ரீதியான கொள்கை உபாயங்களின் பின்னணியில் குறிப்பீடு செய்யப்பட்ட இலக்கினை நோக்கி நிதி திட்டங்களை சமர்ப்பிக்கும் அதேவேளை, அரசாங்க செலவின முகாமைத்துவத்தின்பால் கூடிய கவனம் செலுத்துகின்றது. இச்செயன்முறையானது நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்கத்தின் நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய திறைசேரித் திணைக்களங்கள் என்பவற்றுடன் தொடரான உசாவுகையின் பெயரில் மேற்கொள்ளப்படுகின்றது.

## 1.1 தூர நோக்கு

“நிதி வளங்களின் வினைத்திறன் மிக்க ஒதுக்கீட்டினூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்தி”

## 1.2 பணிக்கூற்று

அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அரசாங்க பொருட்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சேவைகளின் வினைத்திறன் மிக்க வழங்கலுக்காக பொது நிதி வளங்களின் மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு.

## 1.3 இலக்குகள்

- அரசிறை ஒழுங்குகளைப் பேணுதல்.
- அரசிறை வளர்ச்சியினை உறுதிப்படுத்துதல்.
- சிறந்த மதிப்பீட்டுக்கான கற்றல் மற்றும் பகிர்வு.

## 1.4 பணிகளும் பொறுப்புக்களும்

### 1.4.1 தேசிய வரவுசெலவுத் திட்டத்தினைத் தயாரித்தல்

;

- வரவு செலவுத் திட்டமிடல் செயல்முறை தொடர்பான திறைசேரித் திணைக்களங்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.
- வரவு செலவுத் திட்டத்திற்கான பாரிய பொருளாதார வரைசட்டகத்தைத் தயாரித்தல்.
- வரவு செலவுத் திட்டத்தின் பாரிய பொருளாதார வரைசட்டகத்திற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- வரவு செலவுத் திட்ட அழைப்பை வெளியிடுதல்.
- செலவின முகவராண்மைகளுடன் கலந்துரையாடி வரைவு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- செலவிடும் முகவராண்மைகள், வருமானத் திணைக்களங்கள் மற்றும் தனியார்த் துறைகளுடனான வரவு செலவுத் திட்டக் கலந்துரையாடல்களை நடாத்துதல்.
- வருமானம், செலவினம், நிதியிடல் மற்றும் கடன்பெறும் எல்லைகளை தீர்மானித்தல் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு)
- வருமானம்/ செலவினம் / நிதியிடல் / கடன்பெறும் எல்லைகளை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) தீர்மானித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்திற்கான வரவு செலவு மதிப்பீடுகளைத் தயாரிக்கும் நடவடிக்கைகளை முடிவுறுத்துதல்.
- ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கான ஒதுக்கீடுகளை நிறைவு செய்தல்.
- சட்ட வரைஞர் திணைக்களத்திடமிருந்தும் சட்டமா அதிபதியிடமிருந்தும் வரைவு ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்திற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல். (முதலாவது வாசிப்பு)
- சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அச்சிடப்பட்ட வரைவு வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் இரண்டாவது வாசிப்பு விவாதத்தில் பங்குபற்றல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்திற்கான குழு நிலை திருத்தங்களை சமா்ப்பித்தல் மற்றும் வரைவு மதிப்பீடுகளை சமா்ப்பித்தல்.

- வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு - குழுநிலை விவாதம், வாக்கெடுப்பு மற்றும் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- ஆணைப்பத்திரத்தினைத் தயாரித்தல் மற்றும் கௌரவ நிதி, திட்மிடல் அமைச்சர் அவர்களின் அங்கீகாரத்தைப் பெறுதல் (டிசம்பர் 31 இற்கு முதல்)
- செலவிடும் முகவராண்மைகளுக்கும் வருமானத் திணைக்களங்களுக்கும் செலவின அதிகாரமளிப்புச் சுற்றுநிருபத்தினை அனுப்புதல்.

### 1.4.2 நடப்பாண்டு வரவு செலவுத்திட்டத்தினை செயற்படுத்தல் 2018

தேசிய வரவு செலவுத்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக பின்வரும் செயற்பாடுகள் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

- அங்கீகாரம் அளித்தல் உள்ளடங்களாக வரவு செலவுத்திட்டச் செயற்படுத்துகை தொடர்பான வழிகாட்டல்களையும் சுற்றுநிருபங்களையும் வெளியிடுதல்.
- அங்கீகரிக்கப்பட்ட வரையறைகள் மற்றும் பராமரிக்கப்படும் அரசிறை ஒழுங்குகளுக்குள் வெளிப்படுத்தப்பட்ட நோக்கங்களுக்காக நிதி பிரத்தியேகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு கட்டுப்பாடுகளை விதித்தல்.
- தொழிற்பாட்டு வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு செலவின முகவராண்மைகளுடன் கலந்துரையாடுதல்.
- வரவு செலவுத்திட்ட மீளாய்வு செயற்படுத்துகை குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு தெரிவுசெய்யப்பட்ட மூலதனக் கருத்திட்டங்களுக்காக காசு விடுவிப்பதற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு பரிந்துரைகளை வழங்குதல்.
- நிதி மூலங்களை ஒதுக்கீடு செய்தல் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான அவதானிப்புகளை தயாரித்தல்.
- அரச கணக்குகள் குழு, அரச நிதிக் குழு, அரச தொழில் முயற்சிகள் மீதான குழு மற்றும் பாராளுமன்ற கூட்டங்களில் திறைசேரியினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.
- பாராளுமன்ற குழுக்கள், சனாதிபதியின் கூட்டங்கள் மற்றும் பிரதமரின் கூட்டங்களில் திறைசேரியினை பிரதிநிதித்துவப்படுத்தல்.
- நிதிபிரமானக் குறிப்பு 6 இன் கீழ் மாற்றல்களுக்கான அங்கீகாரம் வழங்குதல்.
- உரிய அமைச்சுக்களின் மூலம் வரவு செலவுத்திட்ட முன்மொழிவு செயற்படுத்துகை முன்னேற்றத்தினை கண்காணித்தல்.
- வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் சுமூகமான செயற்படுத்துகையினை உறுதிப்படுத்துவதற்கு நிதிபிரமானக் குறிப்பு 66/69 இன் கீழ் ஒதுக்கீட்டு மாற்றல்களுக்கான அங்கீகாரம் வழங்குதல்.

### 1.4.3 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

- வர்த்தக, களஞ்சியங்கள், அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்குகளுக்கான வரையறைகளை தீர்மானித்தல் மற்றும் செலவின முகவராண்மைகளிலிருந்து வேண்டுகோள்களின் அடிப்படையில் வரையறைகளைத் திருத்துதல்.

### 1.4.4 வரவு செலவுத்திட்ட கண்காணிப்பினைச் செயற்படுத்தல்

- வரவு செலவுத்திட்ட கண்காணிப்புத் தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் சுற்று நிருபங்களை வெளியிடுதல்.

- திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகள் உள்ளடங்களாக அமைச்சுக்களின் நிதி மற்றும் பௌதிக செயலாற்றுகை, வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை கண்காணித்தல்.

### 1.4.5. வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளர்களுக்கான வசதி ஏற்பாடு

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளர்களுக்கான ஏற்பாடுகளைச் செய்தல்

### 1.4.6. செயலாற்றுகைப் பொழிப்பு - 2018

மேலே குறித்த பொறுப்புக்கள் மற்றும் பணிகள் தொடர்பான பெரும் எண்ணிக்கையிலான நடவடிக்கைகள் இத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அச் செயற்பாடுகளின் செயலாற்றுகை கீழே அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 1 : செயலாற்றுகை சுருக்கம் - 2018**

| தொழிற்பாடு | நடவடிக்கை | பொதுவான இலக்கு | அடைவு |
|---|---|---|---|
| 1. 2018 ஆம் ஆண்டு தேசிய வரவு செலவுத் திட்டத்தையும் செலவின முகாமையையும் செயற்படுத்துதல். | செலவின முகாமைத்துவம் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கும் வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தினை வெளியிடுதல். | அரசாங்க செலவினத்தினை வினைத்திறன் மிக்கதாக முகாமை செய்தல். | 3/2017 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபம் 2017.12.27 வெளியிடப்பட்டது. (2018 வரவு செலவுத்திட்ட செலவின அங்கீகாரம் அளித்தல் மற்றும் பொது செலவின முகாமை). |

| தொழிற்பாடு | நடவடிக்கை | பொதுவான இலக்கு | அடைவு |
|---|---|---|---|
| | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழான ஏற்பாடுகளை மீள் ஒதுக்கீடு செய்தல் | நிதி முகாமைத்துவமும் தேவையற்ற செலவினங்களை குறைத்தலும் | வெள்ளம், வரட்சி போன்ற எதிர்பாராத நிகழ்வுகளுக்கு தேவையான மேலதிக நிதி ரூபா 312.97 பில்லியன் பெறுமதியான 687 கொடுப்பனவுகள் வழங்கப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட செலவின வரையறைக்குள் மீள் ஒதுக்கீடு செய்ய முடியுமாக இருந்தது. |
| | இரண்டு மாதத்திற்கொருமுறை குறைநிரப்பு ஒதுக்கீடுகளை வழங்குதல் பற்றிய குறைநிரப்பு அறிக்கைகளை சமர்ப்பித்தல் | ஒதுக்கீட்டுச் சட்ட ஏற்பாடுகளை பின்பற்றுதல் | வழங்கப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் அனைத்தையும் உள்ளடக்கிய 08 அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. (2018 சில அறிக்கைகளை உரிய திகதிகளில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது போனது) |
| | நிதிப்பிரமாணக்குறிப்பு 66 மற்றும் 69 மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவின் கீழ் நிதி மாற்றல்களுக்கு அங்கீகாரம் வழங்குதல். | அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்குள் செலவினத்தினைப் பேணுதல் | மேற்குறித்த ஒழுங்கு விதிகளுக்கமைய 1,764 விண்ணப்பங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதில் 266 விண்ணப்பங்கள் நிகழ்ச்சித்திட்ட மாற்றல் மற்றும் 1,498 விண்ணப்பங்கள் கருத்திட்ட மாற்றல்களுக்கானது. நி.பி.கு 69 இன் ஏற்பாடுகளின் கீழ் 50 மாற்றல் விண்ணப்பங்கள் அதிகாரமளிக்கப்பட்டன. |
| 2. 2019 இற்கான தேசிய வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினை தயாரித்தல். | வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வரவு செலவுத்திட்ட வழிகாட்டல்களை (வ.செ.திட்ட அழைப்பு) வழங்குதல். | வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு வழிகாட்டல்களுடன் வரவு செலவுத்திட்ட அழைப்பினை விநியோகித்தல். | வரவு செலவுத் திட்ட சுற்றுநிருபம் 2018.07.17 அன்று வெளியிடப்பட்டது |

| தொழிற்பாடு | நடவடிக்கை | பொதுவான இலக்கு | அடைவு |
|---|---|---|---|
| | செலவின முகவராண்மை திறைசேரி திணைக்களங்கள் என்பவற்றுடன் கலந்துரையாடி வரைவு வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினை தயாரித்தல். | அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதனை உறுதிப்படுத்தல். | நிதி வெகுசன ஊடக அமைச்சரின் தலைமையில் அக்கரை செலுத்துநர்களுடன் வரவு செலவுத்திட்ட முன்னர் கூட்டங்களை நடாத்துதல். |
| | தொடர்புடைய அமைச்சுக்களுடன் வரவு செலவுத்திட்ட கலந்துரையாடல்கள் இடம் பெற்றன. | உண்மையான தேவைகளை கருதி யதார்த்த பூர்வமான வரவு செலவுத் திட்டத்தினை தயாரித்தல். | தொடர்புடைய திணைக்கள முகவர் திறைசேரி செயலாளர் மற்றும் பிரதிச் செயலாளர்களுடன் மீளாய்வுக் கூட்டங்கள் இடம் பெற்றன. |
| | 2019 இற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தினை பாராளுமன்றத்தில் உரிய காலத்தில் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றன. | ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2018 ஒக்டோபர் மூன்றாவது வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>விபரமான மதிப்பீடுகளின் தயாரிப்பு | 2018.09.21 ஆந் திகதிய வர்த்தமானியில் 2019 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பிரசுரிக்கப்பட்டது.<br><br>2018.10.09 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு ஒதுக்கீட்டுச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>ஆனால் 2018 இறுதியில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற நெருக்குதல்கள் காரணமாக குறித்த சட்ட மூலம் செயற்பாட்டுக்கு வரவில்லை எனவே 2019 இன் முதல் 4 மாத செலவினங்களுக்கான வாக்குப் பணக் கணக்கொன்றினை 2018.12.21 ஆந் திகதி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அது குறித்த திகதியில் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. |

| தொழிற்பாடு | நடவடிக்கை | பொதுவான இலக்கு | அடைவு |
|---|---|---|---|
| 3. அமைச்சரவை விஞ்ஞாபனம் மீதான அவதானிப்புகளை சமர்ப்பித்தல் | அரசாங்கத்தின், துறை ரீதியான கொள்கை மற்றும் செலவினம் தொடர்பாக அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான சிபாரிசுகளையும் அவதானிப்புகளையும் காலத்திற்கு காலம் சமர்ப்பித்தல். | அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான அவதானிப்புகளை உடனுக்குடன் சமர்ப்பித்தல். | குறித்த ஆண்டின் போது 462 அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான அவதானிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.<br>1,619 அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு ஏனைய திறைசேரி திணைக்களங்களுக்கு கருத்துரைகள் வழங்கப்பட்டன. |
| 4. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்கள உள்ளக முகாமை | அறிக்கைகள் சமர்ப்பிப்பு | பின்வரும் அறிக்கைகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டன<br>(அ) செயலாற்றுகை அறிக்கை<br>(ஆ) திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை<br>(இ) ஒதுக்கீட்டுக் கணக்கு<br>(ஈ) அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்கு மீள் இணக்கம் | பின்வரும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன<br>(அ) செலவின மீளாய்வு – 2018<br>(ஆ) செயலாற்றுகை அறிக்கையினை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.<br>(இ) ஒதுக்கீட்டுக் கணக்கு 2018<br>(ஈ) அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்கு மீள் இணக்கம் 2018 |
| | திறன் விருத்தி | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சியின் மூலம் மனித வள அபிவிருத்தி. | தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்துடன் தொடர்பான வெளிநாட்டுப் பயிற்சிகளில் 16 பேர் கலந்து கொண்ட அதேவேளை 71 அலுவலர்கள் உள்நாட்டுப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டனர். |

| தொழிற்பாடு | நடவடிக்கை | பொதுவான இலக்கு | அடைவு |
|---|---|---|---|
| | திணைக்கள முற்பணக் கணக்குக் கட்டுப்பாடு | முற்பணக் கணக்கு வரையறைகளுக்குள் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்கள அலுவலர்களின் விண்ணப்பங்களுக்கு கடன் / மானியம் வழங்குதல் | அங்கீகரிக்கப்பட்ட வரையறை களைப் பின்பற்றி, அனர்த்த கடன், துவிச்சக்கர வண்டிக் கடன், விசேட முற்பணங்கள் மற்றும் பண்டிகை முற்பணங்கள் என்பன ரூபா 9,933,467.38 ஆகக் காணப்பட்டது. |
| | கணக்காய்வு வினாக்களுக்கான பதில்கள். | கணக்காய்வு வினாக்களைக் குறைத்தல்<br><br>அரசாங்க கணக்குகள் குழு, அரசாங்க தொழில்முயற்சிகள் குழு மற்றும் அரசாங்க பொது நிதி குழு என்பவற்றுக்கு சமுகமளித்தல். | கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் (18) பதிலளிக்கப்பட்டது. |
| 5. வெளிநாட்டு அபிவிருத்திப் பங்காளர்களுக்கான (சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி) வசதியேற்பாடு. | தேவையான போது தேவையான இடத்தில் அபிவிருத்திப் பங்காளர்களுடன் கலந்துரையாடல்களில் பங்குபற்றுதல். | திணைக்களத்திற்குத் தேவையான தகவல்களை வழங்குதல். | அபிவிருத்தி பங்காளர்களுடன் சிறந்த ஒருங்கிணைப்பைப் பேணுதல். |

## 2. வரவு செலவுத்திட்ட மீளாய்வு மற்றும் செயற்படுத்துகை - 2018

### 2.1. 2018 இற்கான ஒதுக்கீட்டுச் சட்டம்

2018 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2018 டிசம்பர் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2017 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமொன்றாக அங்கீகரிக்கப்பட்டது.

ஒதுக்கீட்டுச் சட்டமானது முதலாவது அட்டவணை, இரண்டாவது அட்டவணை மற்றும் மூன்றாவது அட்டவணை ஆகிய மூன்று அட்டவணைகளை கொண்டுள்ளது. ஒவ்வொரு அட்டவணையும் கீழே அட்டவணை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவினங்களை உள்ளடக்கியிருக்கும்.

**அட்டவணை 2 : 2018 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டம்**

| | | |
|---|---|---|
| **முதலாவது அட்டவணை** | நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில் அரசாங்கத்தின் பொதுச் சேவைகளுக்கான செலவினம். | மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 2,143 பில்லியன். |
| **இரண்டாவது அட்டவணை** | சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட திரட்டு நிதியத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய அரசாங்கத்தின் செலவினம். | விசேட சட்டங்களின் கீழ் மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 2,005 பில்லியனாகும். |
| **மூன்றாவது அட்டவணை** | முற்பணக் கணக்கு செயற்பாடுகள் தொடர்பான செலவினம். | அரசாங்க வரவு செலவுத் திட்டத்திலிருந்து மதிப்பிடப்பட்ட பங்களிப்பு ரூபா 6 பில்லியனாகும். |

*மூலம் : தே.வ.செலவுத்திட்டத் திணைக்களம்*

இதற்கமைவாக, முழு அரசாங்க செலவினம் ரூபா 4,154 பில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்தது அவற்றுள் மீண்டெழும் செலவினமாக ரூபா 2,164 பில்லியன் மற்றும் மூலதனச் செலவினமாக ரூபா 834 பில்லியனும் பொதுபடுகடன் கொடுப்பனவுக்காக ரூபா 1,150 பில்லியனும், முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்கான ரூபா 6 பில்லியனும் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2(1)(ஆ) பிரிவானது கடன்பெறுகை வரையறையினை ரூபா 1,894 பில்லியனாக குறிப்பிட்டுள்ள அதேவேளை 2017 க்கான கடன்பெறுகை வரையறை ரூபா 1,579 பில்லியனாகக் காணப்பட்டது.

## 2.2 குறைநிரப்பு மதிப்பீடுகள்

உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட செலவின பற்றுச்சீட்டுக்களை செலுத்துவதற்கு ரூபா 30 பில்லியன் குறைநிரப்பு மதிப்பீடொன்றினை சமர்ப்பித்ததுடன் விசேடமாக பாதை அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான காணி சுவீகரிப்பு நட்டஈட்டுக் கொடுப்பனவுக்காக முற்பணங்களின் கொடுப்பனவுக்காக இக்குறைநிரப்பு மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டது. இத்தொகையினை கணக்கீடு செய்வதற்கு ஆணைப்பத்திர இல.01 இனை நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரினால் வழங்கப்பட்டதுடன் குறித்த தொகையினை எதிர்பாரா செலவின நிதியத்திலிருந்து மீளப்பெற்று குறைநிரப்பு மதிப்பீட்டு நிதியத்தில் பயன்படுத்துவதற்கு முடியுமாயிருந்தது.

## 2.3. குறைநிரப்பு ஒதுக்கீடு என்ற வகையில் விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள்

குறித்த வருடத்தில் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2 ஆவது அட்டவணையில் விசேட சட்ட சேவைகளில் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கத்திற்காக மேலதிக நிதி தேவைப்படும் சந்தர்ப்பத்தில் குறைநிரப்பு விசேட சட்ட ஆணைப்பத்திரத்தினை நிதி அமைச்சர் வழங்குதல் வேண்டும். இந்த 2018 வகையில் எட்டு (8) விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள் குறித்த வருடத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

## அட்டவணை 3: குறைநிரப்பு ஒதுக்கீடாக விசேட சட்ட ஆணைப்பத்திரம்

| அதிகார இல. | செலவினம் | | நோக்கம் /குறிக்கோள் | தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| | தலைப்பு இல. | நிறுவனம் | | |
| 01 | 4 | உயர் நீதிமன்ற நீதிபதிகள் | முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருப இல. 2/2018 இற்கமைவாக சம்பளத் திருத்தம். | 9,500,000 |
| 02 | 7 | நீதிச்சேவை ஆணைக்குழு | 2018.08.16 ஆந் திகதிய PS/ACC/CCU/01/02 ஆம் இலக்க சனாதிபதியின் செயலாளரது கடிதத்திற்கு அமைவாக சுயாதீன ஆணைக்குழு உறுப்பினர்களின் சம்பளத் திருத்தம் | 826,000 |
| 03 | 6 | பொது சேவைகள் ஆணைக்குழு | 2018.08.16 ஆந் திகதிய PS/ACC/CCU/01/02 ஆம் இலக்க சனாதிபதியின் செயலாளரது கடிதத்திற்கு அமைவாக சுயாதீன ஆணைக்குழு உறுப்பினர்களின் சம்பளத் திருத்தம் | 1,085,000 |
| 04 | 20 | தேர்தல் ஆணைக்குழு | 2018.08.16 ஆந் திகதிய PS/ACC/CCU/01/02 ஆம் இலக்க சனாதிபதியின் செயலாளரது கடிதத்திற்கு அமைவாக சுயாதீன ஆணைக்குழு உறுப்பினர்களின் சம்பளத் திருத்தம் | 455,000 |
| 05 | 10 | இலஞ்சம் மற்றும் ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலணாய்வு செய்வதற்கான ஆணைக்குழு | 2018.08.16 ஆந் திகதிய PS/ACC/CCU/01/02 ஆம் இலக்க சனாதிபதியின் செயலாளரது கடிதத்திற்கு அமைவாக சுயாதீன ஆணைக்குழு உறுப்பினர்களின் சம்பளத் திருத்தம் | 720,000 |
| 06 | 239 | உள்நாட்டு வளங்கள் திணைக்களம் | ஆசிய உட்கட்டமைப்பு வங்கியின் 7/2016 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கமைவாக 2015 இலிருந்து 2019 வரை ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்கான பங்களிப்புக் கட்டணம் | 191,200,000 |
| 07 | 8 | தேசிய கொள்கைகள் ஆணைக்குழு | 2018.08.16 ஆந் திகதிய PS/ACC/CCU/01/02 ஆம் இலக்க சனாதிபதியின் செயலாளரது கடிதத்திற்கு அமைவாக சுயாதீன ஆணைக்குழு உறுப்பினர்களின் சம்பளத் திருத்தம் | 835,000 |
| 08 | 249 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம | படுகடன் சேவைகள் மீது ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாட்டுப் பற்றாக்குறையினை ஈடு செய்தல். | 119,779,150,000 |

*மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## 2.4 வரவு செலவுத்திட்ட செயலாற்றுகை – 2018

அரசாங்கத்தின் மொத்த உண்மையான செலவினம் 2017 இல் காணப்பட்ட ரூபா 3,470 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 3,971 பில்லியனாக ரூபா 501 பில்லியனால் அதிகரித்தது. இது மதிப்பிடப்பட்டிருந்த செலவினத்திற்கெதிராக ரூபா 4,148 பில்லியன் என்பதுடன் மதிப்பிடப்பட்ட செலவினத்தினைவிட ரூபா 177 பில்லியன் குறைவானதாகும். 2018 இல் வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகளின் மொத்த பயன்பாட்டு விகிதம் 96 சதவீதமாகக் காணப்பட்டதுடன் இது 2017 இல் காணப்பட்ட 96 சதவீத செயலாற்றுகையுடன் ஒப்பிடுகையில் சமமாகக் காணப்பட்டது.

ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2(1) ஆம் உறுப்புரையின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட ஏற்பாடுகளில் (வழங்கல் சேவைகள் மீதான செலவினம்) குறித்த வருடத்தின்போது போது 86 சதவீதமாக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது 2017 இல் காணப்பட்டதனைவிட 87 சதவீத அதிகரிப்பாகும். எவ்வாறாயினும் அரசாங்கத்தின் மூலதனச் செலவினத்தின் பயன்படுத்துவதானது தெளிவாக வீழ்ச்சியொன்றினை காட்டுவதுடன் ஆரம்ப முதலீட்டுக்கு எதிராக 75 சதவீதத்தினை அல்லது ரூபா ரூபா 625 பில்லியனை பதிவாக்கியுள்ளது.இது 2017 இல் காணப்பட்ட 75 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 834 பில்லியன் ஆரம்ப மதிப்பீட்டுக்கு எதிரானதாகும். மீண்டெழும் செலவினங்களின் பயன்பாடு 97 சதவீதமாக அல்லது ரூபா 2,164 பில்லியனாகக் காணப்பட்டது.

விசேட சட்டத்தின் கீழ் செலவின மதிப்பீடுகள் (நிதிக் குறியீடு 21- ஒதுக்கீட்டுச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணை) ஆரம்ப மதிப்பீடான ரூபா 2,005 பில்லியனுக்கு எதிரான ரூபா 118 பில்லியன் செலவினத்தினைக் காட்டியது. இது அடிப்படையில் ரூபா மதிப்பிறக்கத்தின் காரணமாக படுகடன் சேவைகளின் அதிகரிப்பு, லிபோ விகிதங்களின் அதிகரிப்பு மற்றும் மீள் கொடுப்பனவு மற்றும் வட்டிக்கொடுப்பனவில் அதிகரிப்புக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களுக்கான வட்டிக் கொடுப்பனவு கடந்த 24 மாதங்களில் அதிகரிப்பு ஏற்பட்டமை என்பவற்றினாலாகும்.

ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 1 ஆவது அட்டவணையின் ஊடாக மொத்த செலவினம் மதிப்பிடப்பட்டிருந்த ஆரம்ப செலவினமான ரூபா 2,143 பில்லியனுக்கு எதிராக ரூபா 1,848 பில்லியனை செலவிட்டதன் மூலம் 86 சதவீத முன்னேற்றத்தினைக் காட்டியது. நிகழ்ச்சித்திட்டம் 1 - தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2 - அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகிய இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் உண்மையான செலவின பதிவின் அடிப்படையில் வளர்ச்சிப் போக்கினை எடுத்துக்காட்டுகின்றது.

**அட்டவணை 4 : வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டுப் பயன்பாடு 2017 - 2018**

| (ரூபா.பில்) | | | | |
|---|---|---|---|---|
| **செலவின வகுதி** | **2017** | | **2018** | |
| | **வ.செ.தி** | **செலவினம்** | **வ.செ.தி** | **செலவினம்** |
| **ஒதுக்கீட்டுச் சட்டம் (1 அட்டவணை)** | **2,113** | **1,832** | **2,143** | **1,848** |
| நிகழ்ச்சித்திட்டம் -1 | 965 | 1,011 | 1,087 | 1,052 |
| நிகழ்ச்சித்திட்டம் -2 | 1,148 | 821 | 1,056 | 796 |
| **விசேட சட்ட சேவை (2 அட்டவணை)** | **1,515** | **1,638** | **2,005** | **2,123** |
| **முற்பணக் கணக்கு (3 அட்டவணை)** | **5** | **4** | 6 | 4 |
| **மொத்தம்** | **3,628** | **3,470** | **4,148** | **3,971** |

*மூலம் : அரச கணக்குகள் திணைக்களம்*

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான அரசாங்கச் செலவினத்தின் நிதி மூலம் அட்டவணை 5 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5 : அரசாங்க செலவினத்தின் நிதி மூலம்**

| நிதிக் குறியீடு | நிதி மூலம் | 2017 ரூபா.பில் | 2018 ரூபா.பில் |
|---|---|---|---|
| 11 | உள்நாட்டு நிதி | 1,572.2 | **1,617.0** |
| 12 | வெளிநாட்டுக் கடன்கள் | 214.7 | 180.1 |
| 13 | வெளிநாட்டு மானியம் | 6.3 | **9.0** |
| 14 | மீளளிக்கும் வெளிநாட்டு கடன் | 2.1 | **3.8** |
| 15 | மீளளிக்கும் வெளிநாட்டு மானியம் | **0.1** | **0.1** |
| 16 | மறுதிறத்து நிதி | 0.5 | **0.1** |
| 17 | வெளிநாட்டு நிதியளிப்புடன் தொடர்பான உள்நாட்டு செலவினங்கள் | 35.6 | 31.9 |
| 18 | வெளிநாட்டு நிதி தொடர்பான உள்நாட்டு செலவினம் | - | 5.7 |
| 21 | விசேட சட்டங்கள் | **1,638.0** | **2,122.9** |
| **மொத்தம்** | | **3,469.7** | **3,970.6** |

*மூலம் : அரச கணக்குகள் திணைக்களம்*

## அட்டவணை 6: பயன்படுத்தப்படாத நிதி ஏற்பாடுகள்

ரூபா மில்

| அமைச்சின் பெயர்/செலவின விடயம் | மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் | திறைசேரி நானாவித தலைப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட மேலதிக ஏற்பாடு | விசேட ஆணைப் பத்திரம் மற்றும் பாராளுமன்றத்தின் மூலம் குறைநிரப்பு ஒதுக்கீடு | மொத்த ஏற்பாடுகள் (1)+(2)+(3) | உண்மையான செலவினம் | பயன்படுத்த படாத ஏற்பாடுகள் (4)-(5) |
|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| விசேட செலவின அலகுகள் | 25,472 | 1,464 | 13 | 26,949 | 19,780 | 7,169 |
| புத்த சாசன | 1,463 | 1,262 | | 2,725 | 2,324 | 402 |
| நிதி மற்றும் வெகுசன ஊடக | 63,092 | 9,919 | | 73,012 | 46,266 | 26,746 |
| பாதுகாப்பு | 290,711 | 7,921 | | 298,633 | 282,747 | 15,886 |
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் | 29,178 | 27,054 | 191 | 56,423 | 27,443 | 28,980 |
| அனர்த்த முகாமைத்துவம் | 5,811 | 6,812 | | 12,623 | 11,277 | 1,346 |
| தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் | 13,531 | 182 | | 13,713 | 13,601 | 111 |
| நீதி | 11,150 | 2,258 | | 13,408 | 11,821 | 1,587 |
| சுகாதாரம்,போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவம் | 178,400 | 8,433 | | 186,833 | 169,016 | 17,817 |
| வெளிநாட்டலுவல்கள் | 10,779 | 2,050 | | 12,829 | 12,436 | 393 |
| போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் | 42,137 | 14,721 | | 56,857 | 52,157 | 4,701 |
| உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் | 182,757 | 55,954 | 30,000 | 268,711 | 228,554 | 40,157 |
| விவசாயம் | 23,790 | 34,907 | | 58,697 | 49,145 | 9,553 |
| மின்வலு புதுப்பிக்கக்கூடிய சக்தி | 838 | 337 | | 1,175 | 993 | 182 |
| மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் | 3,009 | 5,930 | | 8,939 | 8,340 | 599 |
| உள்நாட்டலுவல்கள் | 44,100 | 7,926 | | 52,026 | 46,378 | 5,648 |

ரூபா மில்

| அமைச்சின் பெயர்/செலவின விடயம் | மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் | திறைசேரி நானாவித தலைப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட மேலதிக ஏற்பாடு | விசேட ஆணைப் பத்திரம் மற்றும் பாராளுமன்றத்தின் மூலம் குறைநிரப்பு ஒதுக்கீடு | மொத்த ஏற்பாடுகள் (1)+(2)+(3) | உண்மையான செலவினம் | பயன்படுத்த படாத ஏற்பாடுகள் (4)-(5) |
|---|---|---|---|---|---|---|
| காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு | 9,097 | 59 | | 9,157 | 8,272 | 885 |
| வீடமைப்பு மற்றும் நிர்மாணம் | 11,248 | 894 | | 12,141 | 10,238 | 1,904 |
| சமூகவலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டிய மரபுரிமை | 18,579 | 52,095 | | 70,674 | 67,294 | 3,380 |
| கல்வி | 102,880 | 3,699 | | 106,579 | 77,451 | 29,128 |
| பொதுநிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் | 233,864 | 144 | | 234,008 | 229,875 | 4,133 |
| பெருந்தோட்டக் கைத்தொழில்கள் | 8,645 | 458 | | 9,103 | 7,064 | 2,039 |
| விளையாட்டுத்துறை | 5,425 | 3,026 | | 8,451 | 3,766 | 4,685 |
| மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி | 3,748 | 5 | | 3,753 | 2,575 | 1,178 |
| சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் | 11,426 | 3,656 | | 15,081 | 12,385 | 2,696 |
| பிராந்திய அபிவிருத்தி | 973 | 5 | | 978 | 756 | 221 |
| அபிவிருத்தி ஒப்படை | 1,292 | 18 | | 1,311 | 366 | 945 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தகம் | 9,081 | 3,570 | | 12,651 | 6,422 | 6,229 |
| பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி | 309 | 19 | | 328 | 277 | 51 |
| கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி | 7,758 | 2,571 | | 10,329 | 5,621 | 4,708 |
| கிராமிய பொருளாதார அலுவல்கள் | 7,239 | 741 | | 7,980 | 5,338 | 2,642 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி | 218,217 | 11,691 | | 229,909 | 215,518 | 14,391 |

ரூபா மில்

| அமைச்சின் பெயர்/செலவின விடயம் | மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் | திறைசேரி நானாவித தலைப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட மேலதிக ஏற்பாடு | விசேட ஆணைப் பத்திரம் மற்றும் பாராளுமன்றத்தின் மூலம் குறைநிரப்பு ஒதுக்கீடு | மொத்த ஏற்பாடுகள் (1)+(2)+(3) | உண்மையான செலவினம் | பயன்படுத்த படாத ஏற்பாடுகள் (4)-(5) |
|---|---|---|---|---|---|---|
| தேசிய நல்லிணக்க, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் | 763 | 296 | | 1,059 | 893 | 166 |
| பொது தொழில்முயற்சிகள் அபிவிருத்தி | 5,572 | 701 | | 6,274 | 1,088 | 5,185 |
| சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் | 1,024 | 512 | | 1,536 | 674 | 862 |
| மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் | 45,611 | 1,868 | | 47,479 | 40,884 | 6,595 |
| நிலையான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் | 4,779 | 255 | | 5,034 | 3,699 | 1,335 |
| மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி | 51,109 | 10,370 | | 61,479 | 32,332 | 29,147 |
| உள்நாட்டலுவல்கள், வடமேற்கு அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் | 8,545 | 1,209 | | 9,754 | 7,041 | 2,713 |
| தேசிய நல்லிணக்க மற்றும் மீள் கட்டமைப்பு | 2,770 | 4,883 | | 7,653 | 2,985 | 4,668 |
| நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் | 27,862 | 7,521 | | 35,383 | 32,701 | 2,682 |
| விசேட ஒப்படை | 105 | 4 | | 109 | 31 | 78 |
| துறைமுகம் மற்றும் கப்பற்றொழில் | 2,548 | 1,356 | | 3,904 | 1,547 | 2,357 |
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு | 686 | - | | 686 | 567 | 119 |
| சட்டம் மற்றும் ஒழுங்கு, தெற்கு அபிவிருத்தி | 82,899 | 756 | | 83,655 | 76,193 | 7,462 |
| தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் | 5,231 | 23 | | 5,254 | 4,088 | 1,166 |
| தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு | 2,270 | 3,520 | | 5,790 | 3,525 | 2,265 |

ரூபா மில்

| அமைச்சின் பெயர்/செலவின விடயம் | மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் | திறைசேரி நானாவித தலைப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட மேலதிக ஏற்பாடு | விசேட ஆணைப் பத்திரம் மற்றும் பாராளுமன்றத்தின் மூலம் குறைநிரப்பு ஒதுக்கீடு | மொத்த ஏற்பாடுகள் (1)+(2)+(3) | உண்மையான செலவினம் | பயன்படுத்த படாத ஏற்பாடுகள் (4)-(5) |
|---|---|---|---|---|---|---|
| உபாய அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தகம் | 2,097 | 4,253 | | 6,350 | 2,202 | 4,148 |
| விஞ்ஞானம்,தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி | 5,643 | 1,054 | | 6,697 | 4,945 | 1,753 |
| திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி | 10,882 | 331 | | 11,213 | 9,751 | 1,462 |
| நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கல் முகாமைத்துசம் | 24,631 | 3,942 | | 28,573 | 18,933 | 9,640 |
| ஆரம்பக் கைத்தொழில்கள் | 3,511 | 166 | | 3,677 | 2,513 | 1,165 |
| **கடுகடன் சேவைக் கொடுப்பனவு** | **1,970,000** | **170** | **119,779** | **2,089,949** | **2,088,551** | **1,398** |
| **திறைசேரி நானாவித தலைப்பு** | **313,307** | **(312,973)** | | **334** | | **334** |
| **முழு மொத்தம்** | **4,147,845** | | **149,984** | **4,297,829** | **3,970,636** | **327,193** |

*மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம், அரச கணக்குகள் திணைக்களம்*

## 2.5. முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

முற்பணக் கணக்கு செயற்பாடுகளுக்கான உண்மையான செலவினம் மதிப்பிடப்பட்ட ஆகக் கூடிய செலவினமான ரூபா 27.63 பில்லியனுக்கெதிராக ரூபா 25.79 பில்லியனாக காணப்பட்டது. உண்மையான மொத்தப் பெறுகையானது மதிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த பெறுகையான ரூபா 21.63 பில்லியனுக்கெதிராக ரூபா 21.93 பில்லியனாகக் காணப்பட்டது.

இதற்கமைவாக, முற்பணக்கணக்குச் செயற்பாடுகள் 2017 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் காணப்பட்டது. முற்பணக்கணக்கின் கீழான செயற்பாடுகள் ஆதனக் கடன் நீங்களாக அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணங்கள் என்ற வகையில் வர்த்தக நோக்கம் கொண்ட செயற்பாடுகளையும் உள்ளடக்கியிருந்தது.

## 2.6 வரவு செலவுத்திட்டத்தை முகாமைசெய்தல் - 2018

### 2.6.1. நிதி மாற்றல்கள் (வயர்மன்ட் நடபடி முறைகள்)

ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவுக்கமைவாக, வயர்மன்ட் நடபடி முறைகள் மற்றும் வரையறைகளைப் பின்பற்றி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மொத்தச் செலவின வரையறைக்குள் பயன்படுத்தப்படாத ஏற்பாடுகளின் மாற்றல் அல்லது மீள் ஒதுக்கீட்டுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது. 2018 நிதி வருடத்தின்போது 66 மற்றும் 69 நிதிப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் பொது திறைசேரியினால் 1,764 கோரிக்கைகள் நிதி மீள் ஒதுக்கீட்டுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டது.

### 2.6.2. குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள்

